**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காட்பாடி**

**முன்னிலை – திரு. S.K.P. திலிப்பாபு, M.A., M.L.,**

**நீதிமன்ற நடுவர், காட்பாடி**

**2026–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 03–ம் நாள் திங்கட்கிழமை**

**CC.No.64/2026**

**CNR.NO. TNVL – 24 – 000708– 2026**

அரசுக்காக காவல் ஆய்வாளர் மூலமாக,

பிரம்மபுரம் காவல் நிலையம்,

குற்றஎண்.21/2026

U/s.296(b), 118(1), BNS,

4 of TNPHW ACT

……………..குற்றமுறையீட்டாளர்

// எதிர்//

A1. விநாயகம் த/பெ.கோவிந்தராஜ்

A2. சிவகாமி, க/பெ விநாயகம்

A3. கிருஷ்ணமூர்த்தி த/பெ விநாயகம்

(மூவரும் வசிப்பது, நெ. 1/282 பொன்னியம்மன் கோயில் தெரு,

கரிகிரி கிராமம், காட்பாடி தாலுக்கா,

வேலூர் மாவட்டம்.

……..குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள்

| Sl.No | காவல்நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | எதிரியின் விவரங்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | பெயர் | தந்தையின்/ கணவர் பெயர் | தொழில் | இருப்பிடம் | வயது |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | பிரம்மபுரம் காவல் நிலையம், குற்றஎண்.21/2026 U/s.296(b), 118(1), BNS, 4 of TNPHW ACT | விநாயகம் | கோவிந்தராஜ் | -- | நெ. 1/282 பொன்னியம்மன் கோயில் தெரு, கரிகிரி கிராமம், காட்பாடி தாலுக்கா, வேலூர் மாவட்டம். | 65 |
| 2 | | சிவகாமி | விநாயகம் | -- | நெ. 1/282 பொன்னியம்மன் கோயில் தெரு, கரிகிரி கிராமம், காட்பாடி தாலுக்கா, வேலூர் மாவட்டம். | 65 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | | கிருஷ்ணமூர்த்தி | விநாயகம் | -- | நெ. 1/282 பொன்னியம்மன் கோயில் தெரு,<br>கரிகிரி கிராமம், காட்பாடி தாலுக்கா,<br>வேலூர் மாவட்டம். | 26 |

S K P DILIP BABU

Digitally signed by S K P DILIP BABU
Date: 2026.08.03 21:09:11 +0530

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.

| நிகழ்வு நாள் | புகார் கொடுத்த நாள் | எதிரகளை கைதுசெய்த நாள் | எதிரிகளை பிணையில் விடுவித்த நாள் | சிறைக்கு அனுப்பி வைத்தது | வழக்கு விசாரணைஆரம்ப நாள் | வழக்கு விசாரணை முடிந்த நாள் | தண்டனை உத்தரவு | குற்றவாளி கள் மீதான தீர்ப்புரைக்குரிய தீர்வு முடிவின் நகலை ஒப்படைத்தல் | காலதாழ்விற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 19.02.2026 | 20.02.2026 | -- | | -- | 21.05.2026 | 09.07.2026 | 03.08.26 | -- | NO DELAY |

இவ்வழக்கானது 10.04.2026-ம் தேதி அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு தன் முன்பாக விசாரணைக்காக வந்ததில் குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை-1 அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.கரண் S.ராகுல்கணேஷ் அவர்கள் முன்னிலையாகியும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

1. கடந்த 19.02.2026-ம் தேதி காலை 11.00 மணிக்கு பிரம்மபுரம் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட கரிகிரி கிராமம் பொன்னியம்மன் கோயில் தெருவில் வசிக்கும் வழக்கின் சாட்சி 1 திரு.மனோகரன் மற்றும் சாட்சி -2 திரு.விஜயலட்சுமி இருவரும் தனது வீட்டின் அருகில் இருந்தபோது அங்கு இருந்த இக்குற்ற அறிக்கையில் குறிப்பிட்டுள்ள எதிரிகள் மூவரும் ஒன்று சேர்ந்து சாட்சிகள் 1 மற்றும் 2 ஆகியோர்களை ஏற்கனவே உள்ள சொத்து பிரச்சனை சம்மந்தமாக பொறம்போக்கு பாடுஸ் என்று அசிங்கமாக திட்டியது பிரிவு 296(b) BNS-ன் படியும் 1 ஆம் எதிரி தனது கையில் வைத்திருந்த மூங்கில் கொம்பால் சாட்சி -1 ன் தலை மீது அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தியது பிரிவு 118(1)BNS-ன் படியும், 1 ஆம் எதிரி கையில் இருந்த அதே மூங்கில் கொம்பை எதிரிகள் 2 ஆம் எதிரி மற்றும் 3 ஆம் எதிரி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்கள் வாங்கி சாட்சி -2 விஜயலட்சுமியின் இடது கை மற்றும் முதுகில் மாறி மாறி அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தியது பிரிவு 296(b), 118(1) BNS-ன் படியும் மேலும் சாட்சி 2 திருமதி.விஜயலட்சுமியை பெண் என்றும் பாராமல் மூன்று எதிரிகள் பொது இடத்தில் வைத்து அசிங்கமாக திட்டி அடித்தது பிரிவு 4 OF TNPHW Act-ன் படியும் தண்டிக்க தக்க குற்றம் புரிந்தவர்களாகிறார்கள். எனவே மூன்று எதிரிகள் மீது

சட்டப்பிரிவுகள் 296(b), 118(1) BNS r/w 4 OF TNPHW ACT- கீழ் குற்றம் என பிரம்மபுரம் காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் வழக்கின் ஆவணநகல்கள் அனைத்தும் பாரதிய நாகரிக் சுரக்ஷா பிரிவு 230-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு அவைகளை பரிசீலனை செய்து பார்க்க தகுந்த சந்தர்ப்பமும் வாய்ப்பும் அளிக்கப்பட்டது.

3. பின்னர் வழக்கு ஆவணங்களை பரீசிலணை செய்தும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும் வழக்கிற்கான முகாந்திரம் உள்ளதால் எதிரிகள் மீது பிரிவு 296(b), 118(1) BNS r/w 4 OF TNPHW ACT-ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து குற்றம் பற்றி வினவ எதிரிகள் குற்றத்தை பொய் என மறுத்துரைத்தனர். எனவே அரசுதரப்பு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசுதரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும் ஆவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரை குறியீடு செய்யப்படுகிறது.

5. <u>அரசுதரப்பு வழக்கின் சாட்சிகளின் சாட்சியத்தின் விபரம் பின்வருமாறு</u>

அ) அ.சா.1 மனோகரன் இந்நீதின்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது கரிகிரியில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். வழக்கின் ஆஜர் எதிரிகளை தெரியும். 19.02.2026 அன்று காலை 10.30 மணியளவில் எதிரிகள் தங்கள் பக்கத்து வீட்டை சார்ந்தவர்கள். சொத்து பிரச்சினை சம்மந்தமாக தேவிடியா பையா, பொண்டாட்டியை கூட்டி கொடுத்து வாங்கி தின்ற பாடுஸ் பையா என்று 2ம் எதிரி சிவகாமி திட்டினார். தன் மனைவி எதற்காக திட்டுகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு 1ம் எதிரி விநாயகம் தேவிடியா பையா என திட்டி 2 ம் எதிரி சிவகாமி மிளகாய் பொடியை தன் மேல் அடித்தார். எதிரி விநாயகம் மூங்கில் கொம்பால் தன் தலை மற்றும் வலது கால் மீது அடித்தார். தான் மயக்கமாகி கீழே விழுந்துவிட்டேன். அதன்பிறகு தன் மனைவி தன்னிடம் 2ம் மற்றும் 3 ம் எதிரி மூங்கில் கொம்பு பிடுங்கி தன் மனைவியை அடித்ததாக தன்னிடம் சொன்னார். தன் மகன் அருண்குமார் சண்டையை விளக்கி விட்டார். தன் மருமகன் விஷயம் தெரிந்தவுடன் தன்னை வேலூர் பழைய அரசு மருத்துவமனைக்கு கூட்டி சென்றார். மேல் சிகிச்சைக்காக அடுக்கம்பாறை மருத்துவமனை சென்றோம். அடுக்கம்பாறை

மருத்துவமனையில் இருக்கும் போலிசார் வந்து தன்னிடம் விசாரணை செய்தார்கள். தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் தன்னுடையது தான். அது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

ஆ) அ.சா.2 விஜயலெட்சுமி இந்நீதின்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது கரிகிரியில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். வழக்கின் ஆஜர் எதிரிகளை தெரியும். 19.02.2026 அன்று காலை 10.00 மணியளவில் மறுநாள் தங்கள் வீட்டில் பங்ஷன் உள்ளதால் அன்றைய தினம் ஆட்களை வரவழைத்து பலகாரம் செய்திருந்தோம். அப்போது 2ம் எதிரி சிவகாமி அசிங்கமாக திட்டி கொண்டிருந்தார்கள். தேவிடியா, ஊரை ஓத்தவ, பணம் சம்மாதிக்கிற என்று திட்டினார்கள். எதற்காக இப்படி திட்டீகிறீர்கள் என கேட்டேன். அதற்கு 2ம் எதிரி அப்படி தான் திட்டுவேன் தேவிடியா என்று சொன்னார். தன் கணவர் எதற்காக திட்டுகிறீர்கள் என கேட்டார். அதற்கு உன் மனைவியை ஓக்கவிட்டு பணம் சம்பாதிக்கிறாய் என்று சொன்னார்கள். அப்போது 1ம் எதிரி விநாயகம் மூங்கில் கொம்பை எடுத்து அடிக்க வந்தார். தனது கணவரின் வலது பக்க தலையிலும், வலதுபக்க காலிலும் அடித்து காயப்படுத்தினார். தான் தடுக்க செல்லும் போது 2ம் எதிரி

சிவகாமி மிளகாய் தூவி போட்டார்கள். 1ம் எதிரியிடமிருந்த மூங்கில் கொம்பை எடுத்து 2 ம் எதிரியும் 3 ம் எதிரியும் தன்னை இடது கை மற்றும் இடது முதுகிலும் அடித்தார்கள். தான் கீழே உட்கார்ந்து விட்டேன். தன் மருமகன் 'அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார். மறுநாள் மருத்துவமனையில் போலிசார் வந்து விசாரணை செய்தார்கள் என்றும், என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

இ) அ.சா.3 அருண்குமார் இந்நீதின்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது கரிகிரியில் வசித்து வருகிறேன். தான் ஏசி மெக்கானிக் 2ம் வருடம் படித்துவருகிறேன். வழக்கின் ஆஜர் எதிரிகளை தெரியும். 19.02.2026 அன்று காலை 10.30 மணியளவில் சொத்து பிரச்சினை காரணமாக தன் அம்மாவையும் தன் அப்பாவையும் தன் பெரியப்பாவான ஆஜர் எதிரி மற்றும் அவர் மனைவி திட்டினார்கள். தேவிடியா பையா என் அம்மாவை கூட்டி கொடுத்து வாழுகிறாய், பொறம்போக்கு என்று திட்டினார்கள். அந்த சமயத்தில் தான் காலேஜில் இருந்தேன். சம்பவத்தை பற்றி தன் மாமா பரந்தாமன் தனக்கு போன் மூலமாக தகவல் சொன்னார். தான் தகவல் அறிந்தவுடன் சம்பவ இடத்திற்கு வந்து பார்த்தபோது சண்டை போட்டு கொண்டிருந்தார்கள். தான் விலக்கிவிட்டேன். அப்போது தன் தந்தைக்கு வலதுபக்க தலையிலும், காலிலும் அடிப்பட்டு

இருந்தது. தன் அம்மாவிற்கு இடது பக்க கையிலும், முதுகிலும் அடிப்பட்டு இருந்தது. தன் மாமா லோகேஷ் என்பவருக்கு போன் செய்து அவரை வரவழைத்து மருத்துவமனை அனுப்பி வைத்தோம். தன்னை போலிசார் விசாரிக்கவில்லை. தன் அம்மாவையும் அப்பாவையும் மட்டும் விசாரணை செய்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

ஈ) அ.சா.4 பூபாலன் இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது கரிகிரியில் வசித்து வருகிறனே். 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். கொத்தனார் வேலை செய்து வருகிறனே். தற்போது தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் முதலவாது கையொப்பம் தன்னுடையது தான். அது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், அந்த கையொப்பத்தை 19.02.2026 ம் வருடம் சண்டை நடந்தது 20.02.2026 ல் அது சம்பந்தமாக மனோகரன் என்பவரின் வீட்டின் அருகே போலிசார் வரைபடம் வரைந்தார்கள். தன்னை அழைத்து சாட்சியமாக கையொப்பம் வாங்கினார்கள். தன்னுடன் ஐயப்பன் என்பவரும் கையொப்பம் செய்தார். போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

உ) அ.சா.5 ஐயப்பன் இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது கரிகிரியில் வசித்து வருகிறேன் என்றும், டெய்லராக வேலை செய்து வருகிறேன். தான் 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன் என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் தன்னுடையது தான் அந்த கையொப்பத்தை தங்கள் ஊரில் உள்ள சிவகாமி, மனோகரன் என்பவரின் வீட்டின் அருகே செய்து கொடுத்தேன். கையொப்பத்தை 20.02.2026 வருடம் மாலை 03.30 மணியளவில் போலிசார் வரைபடம் வரைந்தார்கள் தன்னை அழைத்து சாட்சியமாக கையொப்பம் வாங்கினார்கள். தன்னுடன் பூபாலன் என்பவரும் கையொப்பம் செய்தார். போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

ஊ) அ.சா.6 சூர்யா இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது சிங்கப்பெண் சிறப்புபடை பிரிவில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 20.02.2026 ம் தேதி பிரம்மபுரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் ஆகிய தான் நிலைய பொறுப்பில் இருந்தபோது வேலூர் பெண்ட்லேண்ட் அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற மருத்துவ தகவலின் பேரில் மேற்படி மருத்துவமனைக்கு சென்று பார்க்க மேல் சிகிச்சைக்காக அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக

சிகிச்சையில் இருந்த மனோகரன் த/பெ சண்முகம் என்பவரிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் நிலைய குற்ற எண்.21/2026 சட்டப்பிரிவுகள் 296(பி), 118(1) BNS மற்றும் 4 TNPHW Act ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் முதல் தகவல் அறிக்கையையும், புகார் மனுவையும் இணைத்து கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். ஒரு நகலை தன்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 20.02.2026 ம் தேதி மாலை 16.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் பூபாலன், அய்யப்பன் ஆகியோர் முன்னிலையில் சம்பவம் இடம் மற்றும் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தேன். அது முறையே அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் பூபாலன், அய்யப்பன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கில் காயம்பட்ட புகார்தாரர் மனோகரன் மற்றும் விஜயலட்சுமி 19.02.2026 ம் தேதி வேலூர் பெண்ட்லேண்ட் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் மருத்துவர் சுஜிதா என்பவர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன். அந்த காயச்சான்றுகள் முறையே அ.சா.ஆ.7

மற்றும் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் தன் புலன் விசாரணை மேற்கொண்டதில் மேற்படி மூங்கில் கொம்பை எதிரிகள் சம்பவ இடத்திலிருந்து போகும்போது தன்னுடன் எடுத்து சென்று போகும் வழியில் எங்கோ தூக்கி எறிந்து விட்டதாகவும், எங்கு எறிந்தார் என்று தெரியாது என்று எதிரிகள் மூவரும் தெரிவித்துள்ளார்கள். எனவே வழக்கு சொத்தினை கைப்பற்ற இயலவில்லை என்பதை தனி அறிக்கை மூலம் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேன். அந்த தனி அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் மனோகரன், விஜயலட்சுமி, அருண்குமார், லோகேஷ், பூபாலன், ஐயப்பன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் தனது வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவு 296(b), 118(1), BNS மற்றும் 4 TNPHW Act ன் படி 20.02.2026 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

6) இவ்வழக்கின் அ.சா.1 முதல் அ.சா.6 அரசுதரப்பு சாட்சிகள் எதிரிகளுக்கு பாதகமாக அளித்த சங்கதிகள் குறித்து பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா பிரிவு 351(1)(பி)–ன் கீழ் வினவ எதிரி அந்தப்பகுதிகளை பொய் என மறுத்துரைத்தனர். எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சி உள்ளதா என்று கேட்டபோது இல்லை என்று கூறினர். எனவே எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. <u>தீர்வுக்குரியபிரச்சனை</u>

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில், அரசுதரப்பில் எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றமானது அரசுதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியம் மற்றும் சாண்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதாகும்.

8). இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இவ்வழக்கில் பாரதிய சாக்ஷிய அதிநியம் பிரிவு 104ன் படி எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டினை நிரூபிக்கும் பொறுப்பு அரசுதரப்பை சார்ந்ததாகும்.

9) அரசுதரப்பில் எதிரிக்கு எதிரான குற்றசாட்டினை பொறுத்து நிரூபணம் செய்வதற்கு அ.சா.1 முதல் அ.சா.6 சாட்சிகளை விசாரணை செய்து, மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடுசெய்து, எதிரிக்கு எதிரான குற்றம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக வாதிடப்பட்டது.

10) எதிரி தன்மீது பொய்யாக இவ்வழக்கானது பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், தனக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை எனவும், குற்றசம்பவத்தை பொறுத்து தன்மீது பொய்யாக இவ்வழக்கானது பதிவு செய்யப்பட்டிருப்பதாக கூறி

வாதிடப்பட்டது.

11) அ.சா.1 இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். அவர் தனது சாட்சியத்தில் 19.02.2026 அன்று காலை 10.30 மணியளவில் எதிரிகள் தங்கள் பக்கத்து வீட்டை சார்ந்தவர்கள். சொத்து பிரச்சினை சம்மந்தமாக தேவிடியா பையா, பொண்டாட்டியை கூட்டி கொடுத்து வாங்கி தின்ற பாடுஸ் பையா என்று 2ம் எதிரி சிவகாமி திட்டினார். தன் மனைவி எதற்காக திட்டுகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு 1ம் எதிரி விநாயகம் தேவிடியா பையா என திட்டி 2 ம் எதிரி சிவகாமி மிளகாய் பொடியை தன் மேல் அடித்தார். எதிரி விநாயகம் மூங்கில் கொம்பால் தன் தலை மற்றும் வலது கால் மீது அடித்தார். தான் மயக்கமாகி கீழே விழுந்துவிட்டேன். அதன்பிறகு தன் மனைவி தன்னிடம் 2ம் மற்றும் 3 ம் எதிரி மூங்கில் கொம்பு பிடுங்கி தன் மனைவியை அடித்ததாக தன்னிடம் சொன்னார். தன் மகன் அருண்குமார் சண்டையை விளக்கி விட்டார். தன் மருமகன் விஷயம் தெரிந்தவுடன் தன்னை வேலூர் பழைய அரசு மருத்துவமனைக்கு கூட்டி சென்றார். மேல் சிகிச்சைக்காக அடுக்கம்பாறை மருத்துவமனை சென்றோம். அடுக்கம்பாறை மருத்துவமனையில் இருக்கும் போலிசார் வந்து தன்னிடம் விசாரணை செய்தார்கள். தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் தன்னுடையது தான். போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும்,

சாட்சியம் அளித்துள்ளார்.

12) அ.சா.2 மற்றும் அ.சா.3 இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சிகள் ஆவார். அ.சா.2 தனது சாட்சியத்தில் 19.02.2026 அன்று காலை 10.00 மணியளவில் மறுநாள் தங்கள் வீட்டில் பங்ஷன் உள்ளதால் அன்றைய தினம் ஆட்களை வரவழைத்து பலகாரம் செய்திருந்தோம். அப்போது 2ம் எதிரி சிவகாமி அசிங்கமாக திட்டி கொண்டிருந்தார்கள். தேவிடியா, ஊரை ஓத்தவ, பணம் சம்மாதிக்கிற என்று திட்டினார்கள். எதற்காக இப்படி திட்டீகிறீர்கள் என கேட்டேன். அதற்கு 2ம் எதிரி அப்படி தான் திட்டுவேன் தேவிடியா என்று சொன்னார். தன் கணவர் எதற்காக திட்டுகிறீர்கள் என கேட்டார். அதற்கு உன் மனைவியை ஓக்கவிட்டு பணம் சம்பாதிக்கிறாய் என்று சொன்னார்கள். அப்போது 1ம் எதிரி வினாயகம் மூங்கில் கொம்பை எடுத்து அடிக்க வந்தார். தனது கணவரின் வலது பக்க தலையிலும், வலதுபக்க காலிலும் அடித்து காயப்படுத்தினார். தான் தடுக்க செல்லும் போது 2ம் எதிரி சிவகாமி மிளகாய் தூவி போட்டார்கள். 1ம் எதிரியிடமிருந்த மூங்கில் கொம்பை எடுத்து 2 ம் எதிரியும் 3 ம் எதிரியும் தன்னை இடது கை மற்றும் இடது முதுகிலும் அடித்தார்கள். தான் கீழே உட்கார்ந்து விட்டேன். தன் மருமகன் 'அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார். மறுநாள் மருத்துவமனையில் போலிசார் வந்து

விசாரணை செய்தார்கள் என்றும், என்றும், சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 தனது சாட்சியத்தில் 19.02.2026 அன்று காலை 10.30 மணியளவில் சொத்து பிரச்சினை காரணமாக தன் அம்மாவையும் தன் அப்பாவையும் தன் பெரியப்பாவான ஆஜர் எதிரி மற்றும் அவர் மனைவி திட்டினார்கள். தேவிடியா பையா என் அம்மாவை கூட்டி கொடுத்து வாழுகிறாய், பொறம்போக்கு என்று திட்டினார்கள். அந்த சமயத்தில் தான் காலேஜில் இருந்தேன். சம்பவத்தை பற்றி தன் மாமா பரந்தாமன் தனக்கு போன் மூலமாக தகவல் சொன்னார். தான் தகவல் அறிந்தவுடன் சம்பவ இடத்திற்கு வந்து பார்த்தபோது சண்டை போட்டு கொண்டிருந்தார்கள். தான் விலக்கிவிட்டேன். அப்போது தன் தந்தைக்கு வலதுபக்க தலையிலும், காலிலும் அடிப்பட்டு இருந்தது. தன் அம்மாவிற்கு இடது பக்க கையிலும், முதுகிலும் அடிப்பட்டு இருந்தது. தன் மாமா லோகேஷ் என்பவருக்கு போன் செய்து அவரை வரவழைத்து மருத்துவமனை அனுப்பி வைத்தோம். தன்னை போலிசார் விசாரிக்கவில்லை. தன் அம்மாவையும் அப்பாவையும் மட்டும் விசாரணை செய்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

13) அ.சா.4 மற்றும் அ.சா.5 பார்வை மகஜர் சாட்சிகள் ஆவார். அ.சா.4 தனது சாட்சியத்தில் தற்போது தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் முதலவாது கையொப்பம் தன்னுடையது தான். அது

அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், அந்த கையொப்பத்தை 19.02.2026 ம் வருடம் சண்டை நடந்தது 20.02.2026 ல் அது சம்பந்தமாக மனோகரன் என்பவரின் வீட்டின் அருகே போலிசார் வரைபடம் வரைந்தார்கள். தன்னை அழைத்து சாட்சியமாக கையொப்பம் வாங்கினார்கள். தன்னுடன் ஐயப்பன் என்பவரும் கையொப்பம் செய்தார். போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.5 தனது சாட்சியத்தில் தற்போது தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் தன்னுடையது தான் அந்த கையொப்பத்தை தங்கள் ஊரில் உள்ள சிவகாமி, மனோகரன் என்பவரின் வீட்டின் அருகே செய்து கொடுத்தேன். கையொப்பத்தை 20.02.2026 வருடம் மாலை 03.30 மணியளவில் போலிசார் வரைபடம் வரைந்தார்கள் தன்னை அழைத்து சாட்சியமாக கையொப்பம் வாங்கினார்கள். தன்னுடன் பூபாலன் என்பவரும் கையொப்பம் செய்தார். போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

14) அ.சா.6 இவ்வழக்கின் விசாரணை அதிகாரி ஆவார். அவர் தனது சாட்சியத்தில் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததை பற்றியும், சம்பவம் இடம் சென்று மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்ததை பற்றியும்,

சாட்சிகளை விசாரணை செய்ததை பற்றியும், இறுதியாக இறுதி அறிக்கை தாக்கல் செய்ததை பற்றியும் தாக்கல் செய்துள்ளார். அவரது சாட்சியம் வழக்கு விசாரணைக்கு ஒத்தியதே ஆகும்.

15) இவ்வழக்கில் அ.சா.2 மற்றும் அ.சா.3 மட்டும் எதிரிகளை அடையாளப்படுத்தி எதிரிகள் தான் அசிங்கமான வார்த்தைகளால் திட்டியதாகவும், மூங்கில் கொம்பால் அடித்ததாகவும் அ.சா.1 க்கு அனுசரணையாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 அ.சா.2 மற்றும் அ.சா.3 மூவரும் விருப்ப சாட்சி என்ற அடிப்படையிலும், ஒரே குடும்ப உறுப்பினர்கள் என்று அடிப்படையிலும் சாட்சியம் அளித்துள்ளனர். மேலும் ஆஜர் எதிரிகளுக்கும் தங்களுக்கும் இடையே ஏற்கனவே சொத்துபிரச்சினை உள்ளது என்று கூறியுள்ளதால் அவர்கள் சாட்சியத்தை முழுமையாக இந்நீதிமன்றம் ஏற்கவில்லை.

16) மேற்படி வழக்கில் எதிரிகள் ஆபாசமான வார்த்தைகளால் பேசி கொம்பால் தாக்கினரா என்றால் அதற்குண்டான எந்த சாட்சியமும் அரசு தரப்பால் நிரூபிக்கபடவில்லை. மேலும் அ.சா.1 அ.சா.2 மற்றும் அ.சா.3 ஒரே குடும்ப உறுப்பினர்கள் மற்றும் இரத்த உறவு முறை மற்றும் விருப்பசாட்சி என்ற அடிப்படையிலும் சாட்சியம் அளித்துள்ளனர். மேற்படி குடும்ப உறுப்பினர்களான அ.சா.1 அ.சா.2 மற்றும் அ.சா.3 ஐ தவிர பொதுமக்கள் யாரும் எதிரிகளை

அடையாளப்படுத்தி எதிரிகள் தான் ஆபாசமாக திட்டி கொம்பால் அடித்ததாக யாரும் சாட்சியம் அளிக்காத நிலையில் இந்த வழக்கு குறித்து இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுகிறது. எனவே இந்த சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

17) எனவே இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.6 வரைசாட்சியமாக விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையான சான்றாவணங்கள் மூலம் எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 296(b), 118(1), BNS, r/w 4 of TNPHW Act –ன் கீழான குற்றசாட்டுகள் குறித்து அரசுதரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை, எனவே எதிரிகள் மேற்படி பிரிவுகளின் கீழான குற்றத்தில் குற்றவாளி என்பதனை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசுதரப்பில் நிரூபணம் செய்யவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**<u>18) முடிவாக:</u>**

எதிரிகளுக்கு எதிரான பிரிவுகள் 296(b), 118(1), BNS, r/w 4 of TNPHW Act –ன் கீழான குற்றசாட்டுகள் குறித்து அரசுதரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரிகளின் சந்தேகத்தின் பலனை நல்கி மேற்படி பிரிவுகளின் கீழ்

எதிரிகள் குற்றவாளி அல்ல என முடிவுசெய்து பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா 271(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 03 ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய இத்தீர்ப்பு என்னால் பகரப்பட்டது.

S K P DILIP BABU
Digitally signed by S K P DILIP BABU
Date: 2026.08.03 21:09:28 +0530

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.

**அரசு தரப்பு சாட்சிகள்**

| வ.எண் | சாட்சிகளின் விபரம் |
|---|---|
| அ.சா.1 | மனோகரன் |
| அ.சா.2 | விஜயலெட்சுமி |
| அ.சா.3 | அருண்குமார் |

| | |
|---|---|
| அ.சா.4 | பூபாலன் |
| அ.சா.5 | ஐயப்பன் |
| அ.சா.6 | சூர்யா (விசாரணை அதிகாரி) |

**அரசுதரப்பு சான்றாவணங்கள்**

| வ.எண் | சான்றாவண விபரம் |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2, | பார்வை மகஜரில் முதலாவதாக உள்ள கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | பார்வை மகஜரில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் |
| அ.சா.ஆ 4 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ 5 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ 6 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ 7 | மனோகரன் என்பவரின் காயச்சான்று |
| அ.சா.ஆ 8 | விஜயலெட்சுமி என்பவரின் காயச்சான்று |
| அ.சா.ஆ 9 | தனி அறிக்கை |

எதிரிகள் தரப்பு சாட்சி : இல்லை

எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள் : இல்லை

சான்று பொருட்கள் : இல்லை

**குறிப்பு**

1. வழக்கின் முடிவு சம்பந்தப்பட்ட காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

2. எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.

3. விசாரணை காலத்தில் எதிரிகள் காவல்நிலைய பிணையில் இருந்தார்.

S K P DILIP BABU

Digitally signed by S K P DILIP BABU
Date: 2026.08.03 21:09:34 +0530

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.